கட்டி வைத்திருக்கும் 3,000 வீடுகளுக்கு அன்னை இந்திரா நகர் என்று பெயர் சூட்ட வேண்டுமென்று இந்த இனிய நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அப்படிக் கட்டப் படுகின்ற வீடுகள் எல்லாம் செம்மையாகப் பராமரிக்கப்படு வதற்காக 50 சதவிகிதம் குடியிருப்பவர்களும், 50 சதவிகிதம் அரசாங்கமும் செலவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் கடன் அடைபடுகின்ற வரையில் பழுது பார்க்கின்ற செலவை அரசாங்கம் மேற்கொண்டால் சிறப்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். அப்படி அரசாங்கம் மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிசை மாற்று வாரியத்தால் அடுக்கு மாடி வீடுகள் கட்டப்படுகின்றன. திருவொற்றியூர் பகுதி கடற்கரைப் பகுதி. அங்கே மீனவர்கள் இருக்கிறார்கள். அந்த மீனவ மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளைப் பெரிய செல் வந்தர்கள்தான் பெற முடிகின்ற சூழ்நிலை இருக்கிறது. சாதாரண, நடுத்தரமானவர்கள் அவற்றைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதையும் கருத்திலே கொண்டு, கட்டுகின்ற வீடுகளை நடுத்தர மக்களும், பொருளாதாரத்தில் நலிந்த வர்களும் பெறும் வகையில் எளிமையான திட்டத்தில் கட்டித் தர வேண்டும். குடிசை மாற்று வாரியத்தில் 22 ரூபாய் வாடகை யாக வசூல் செய்கிறார்கள். 10 ஆண்டுகள் அப்படி வசூல் செய்தால்—அதனுடைய மதிப்பு 22,000 ரூபாய்தான்—22,000, 25,000 ரூபாய் வசூலாகிவிடுகிறது. எனவே அந்த வீட்டை அவர்களுக்கே கொடுத்துவிடலாம். உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்கிறபோது, குடியிருப்பவனுக்கு வீடு சொந்தம் என்று சொல்லக்கூடாதா? அந்த அளவிலே அந்த வீட்டை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

8. அரசினர் தீர்மானம் விதி 32—ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''ஒவ்வொருநாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி32-ஐ நாளை 7—5—1987 ஆம் தேதியன்று) தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7-5-1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.24 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

98. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29-9-1986-ஆம் நாளிட்ட 59282/என்.யு. 2/86-2-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 29-9-1986-ஆம் நாளிட்ட 65269/என்.யு.2/86 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

100. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 29-9-1986-ஆம் நாளிட்ட 65270/என். யு. 2/86-2-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

101. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 9-1-1987-ஆம் நாளிட்ட 1/என்.யு. 2/87-ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].